தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக நிதிக் கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகள்

சென்னை-6.

ந.க.எண். 25907 / பி1-இ2 / 2022, நாள். 06.06-2022

பொருள்– பள்ளிக்கல்வி – வரவு செலவுத் திட்டம் – 2022-2023 திட்ட மதிப்பீடு ஒதுக்கீடு பகிர்வு - அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் - மின்கட்டணங்கள் நிலுவை – சார்பாக.

பார்வை –

1. அரசு கடித எண். 11659/ GL1(1) / 2022-1, பள்ளிக் கல்வித் துறை, நாள் 13,05,2022. மற்றும் மின்வாரிய தலைவரின் நேர்முக கடித எண். /CFC/Rev/SO/LB/EE/LB/F. Govt.Arrears/D.65/2022, dt.02.05.2022
2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 25907/ பி1/ இ2/ 2022 நாள்: 09.04.2022

----------

கல்வித்துறை சார்ந்து 31.3.2022 நிலையில் அதிக அளவில் மின்கட்டணங்கள் செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளதாக மின்வாரிய தலைவரால் பள்ளிக் கல்வித்துறை அரசு முதன்மைச் செயலரின் கவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021-2022 ம் ஆண்டில் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கான கணக்குத்தலைப்பில் 2202-02-109-AA 30503 மின்கட்டண இனத்தின்கீழ் வழங்கப்பட்ட நிதிஒதுக்கீட்டில் ஒரு கோடிக்கு அதிகமாக செலவினம் மேற்கொள்ளாமல் மீதம் ஏற்பட்டுள்ளது மாநிலக்கணக்காயரின் கணக்குகளின்படி கண்டறியப்பட்டுள்ளது

எனவே, மின்கட்டண நிலுவை சார்பாக 2022-2023ம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு (B.E. 2022-2023) ஒதுக்கீடுகளில் 2202-02-109-AA என்ற கணக்குத் தலைப்பில் அரசு உயர்நிலை/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு (DDOs) மாவட்டக் கல்வி அலுவலர்களால் மின்கட்டணங்கள் என்ற இனத்தின் கீழ் ஒதுக்கீடு பகிர்வு செய்யப்பட்டதன்படி செலவினங்கள் மற்றும் மின்கட்டண கூடுதல் தேவை குறித்து பள்ளி தலைமையாசிரியர்களிடமிருந்து கணக்கிட்டு பெறப்படவேண்டும். அதன் அடிப்படையில் மொத்த தேவையினை கணக்கிட்டு 2022 – 2023 திருத்த மதிப்பீடு (RE 2022-2023) கோரிக்கைகள் ஆணையரகத்தில் கோரப்படும்போது பள்ளி வாரியாக பட்டியலிட்டு இணைத்து குறித்த காலத்திற்குள் அனுப்பி வைக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இக்கணக்குத் தலைப்பில் மாவட்டக் கல்வி அலுவலர்கள் பெறும் ஒதுக்கீடுகளை IFHRMS-ல் பகிர்வு செய்யும்போது பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்கு (DDOs) உடன் பகிர்வு செய்து IFHRMS Budget Distribution BCO→DDO பணிகள் உடனுக்குடன் நிறைவு செய்து மின்கட்டணங்கள் குறித்த காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும்.

6/6/2022

நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர்

பள்ளிக் கல்வி ஆணையரகம், சென்னை -6

பெறுநர்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

6/6/2022

நகல்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

(தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)